

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2025) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளி மாணவர்களின் பயன்பாட்டிற்காக 3 கோடியே 62 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் 23 வாகனங்கள் மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (சி.எஸ்.ஆர்.) நிதியிலிருந்து 3 வாகனங்கள் என மொத்தம் 26 வாகனங்கள் மற்றும் பழங்குடியின மக்களின் மருத்துவப் பயன்பாட்டிற்காக 5 கோடியே 78 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவில் 25 அவசரகால ஊர்திகள், 4 கோடி ரூபாய் செலவில் 20 நடமாடும் மருத்துவ ஊர்திகள் ஆகியவற்றின் பயன்பாட்டினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எ.வ. வேலு, மருத்துவர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. மருத்துவமனையில் அனுமதி!

# ‘அண்ணன் வைகோ குடும்பத்தார் - மருத்துவரிடம், சிகிச்சை குறித்துக் கேட்டறிந்தேன்’!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக். 7-

அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ அவர்களின் உடல்நலம் குறித்து விசாரித்தது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:



**அண்ணன் வைகோ அவர்கள் உடல்நலம் குன்றி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் செய்தியறிந்ததுமே நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன்.**

**இன்று மருத்துவமனைக்குச் சென்று, அவரது குடும்பத்தாரிடமும், மருத்துவரிடமும் அவரது சிகிச்சை குறித்துக் கேட்டறிந்தேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தொழில் துறையில் பாலிடெக்னிக் மாணவர்கள் சிறந்து விளங்க

# சுடரொளி - மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி மையம்!

## அமைச்சர் கோவி.செழியன் திறந்து வைத்து – ஆசிரியர்களுக்கு ‘நல் ஆசான் விருது’ வழங்கினார்!

*சென்னை, அக். 7 -*

*சென்னை தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் தரமணி, மைய பாலிடெக்னிக் கல்லூரியில் நேற்று (06.10.2025) நடைபெற்ற விழாவில் “சுடரொளி” மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தினை திறந்து வைத்தும், பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு “நல் ஆசான்” விருதுகளும், தொழில்நுட்பக் கல்வி இயக்கத்தின் கீழ் பணிபுரிந்து பணியில் இருக்கும் போது மறைந்த பணியாளர்களின் குடும்ப உறுப்பினர் 5 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் அமைச்சர் அவர்கள் பேசியதாவது:*

*நமது முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க உயர்கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு ‘தமிழ் புதல்வன்’ மற்றும் ‘புதுமைப்பெண்’ போன்ற பல்வேறு திட்டங்களுடன் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக 20.03.2023 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவை கூட்டத்தொடரில் அறிவித்துள்ளபடி, மாற்றுத்திறனாளி மாணவர்களின் நலனுக்காக, சென்னை மைய பாலிடெக்னிக் கல்லூரியில், ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் புதிய திறன் பயிற்சி மையம் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு திறன் மேம்பாட்டு மையமும், மாற்றுத்திறனாளி நல ஆணையகமும் இணைந்து ஆண்டுக்கு 60 மாணவர்கள் வீதம், மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு திறன் பயிற்சிகள் வழங்கப்படும்.*

*நமது முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையால் உருவான “நான் முதல்வன்” திட்டம், வெறும் ஒரு அரசுத் திட்டம் அல்ல; அது, ஒவ்வொரு இளைஞனும் தலைநிமிர்ந்து, தன்னம்பிக்கையோடு நிற்கும் நிலையை உருவாக்கும் ஒரு உன்னத திட்டம். “வேலை தேடுபவராக இல்லாமல், வேலையை உருவாக்குபவராக ஒவ்வொரு இளைஞனும் மாற வேண்டும்” என்பதே நமது முதல்வரின் குறிக்கோள். “நான் முதல்வன்” மூலம், தமிழ்நாடு நாட்டின் திறன்மிக்க தலைநகரமாக மாறி வருகிறது. ‘புதுமைப் பெண்’ ‘தமிழ்ப் புதல்வன்’ போன்ற திட்டங்கள் மாணவ மாணவியரின் சுயமரியாதையுடன் உயர்கல்வி பெற வழிவகை செய்யப்பட்ட சிறந்த திட்டமாகும்.*

*சவால்களை எதிர்கொள்ளும் நமது அன்புக்குரிய சகோதர, சகோதரிகள் சமுதாயத்தில் சம உரிமையுடன் வாழ தேவையான திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பை இந்த மையம் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.*

*தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பணிபுரிந்து பணியில் இருக்கும் பொழுது மறைந்த பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஐந்து நபர்களுக்கும் (3 பெண்கள், 2 ஆண்கள்) கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்படுகிறது.*

*ஒரு கல்லூரியின் வெற்றிக்கு அடிப்படை காரணம், அந்த கல்வி நிறுவனத்தை வழிநடத்தும் முதல்வரின் தொலைநோக்குப் பார்வை மற்றும் தலைமைத்துவப் பண்பு தான். தொழில்துறையுடன் வலுவான பிணைப்பினை ஏற்படுத்தி, மாணவர்களை திறன் மிகுந்த தொழில் வல்லுநர்களாக, நவீன மாற்றங்களுக்கு ஏற்ப அவர்களைச் செதுக்குவதே ஒரு கல்லூரியின் முதல்வர் மற்றும் ஆசிரியர்களின் கடமையாகும்.*

*மேலும், மாணவர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்துதலிலும், நேர்த்தியான வகையில் வகுப்புகளைக் கையாளுவதிலும், மாணாக்கர்களின் நற்பண்புகளை வளர்க்கும் வகையில் வழிகாட்டுதல் வழங்கியும், பாடத்திட்டத்தின் படி தகுந்த முறையில் கல்வி வழங்குதலிலும், புதுமையான கல்வி முறைகளை அறிமுகம் செய்ததிலும், மாணாக்கர்களின் நன்மதிப்பை பெற்று உயர் தேர்ச்சி விழுக்காடு பெற்ற ஆசிரிய பெருமக்களை அங்கீகரித்து கௌரவிக்கும் வகையில் நல் ஆசான் விருது வழங்கப்படுகிறது.*

*அதன்படி, மாணவர்களின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பணிபுரிந்து அவர்களது வாழ்வு சிறக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்ட 6 முதல்வர்கள் மற்றும் 15 விரிவுரையாளர்களுக்கு “நல் ஆசான்” விருதுகள் இன்று வழங்கப்படுகிறது.*

*மேலும், தங்கள் பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை விகிதத்தில் 100% பெற விழைந்த 30 கல்லூரி முதல்வர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. பாலிடெக்னிக் பயிலும் 50 வயதை கடந்த 2 மாணவர்களும் கௌரவிக்கப்படுகிறார்கள்.*

*இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.*

*இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித்துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர் திருமதி ஜெ.இன்னொசென்ட் திவ்யா, மற்றும் தரமணி, மைய பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் முனைவர் ஓ.ஜி.தரணிபதி ஆகியோர் உடனிருந்தனர்.*

### தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை முன்னாள் இயக்குநர்

# நடன. காசிநாதன் மறைவு, தொல்லியல் துறைக்குப் பேரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, அக்.7–**

**தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை முன்னாள் இயக்குநர் நடன. காசிநாதன் அவர்களின் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், “நடன. காசிநாதன் அவர்களின் மறைவு தொல்லியல் துறைக்குப் பேரிழப்பு” என்று குறிப்பிட்டுள்ளார்.**

**முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–**



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் முன்னாள் இயக்குநர் நடன. காசிநாதன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

நடன. காசிநாதன் அவர்கள் பல்வேறு கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், பழமையான சிற்பங்கள், நடுகற்களைக் கண்டுபிடித்த பெருமைக்குரியவர். தமிழரின் தொன்மையை நிலைநாட்ட நமது திராவிட மாடல் அரசு ஆற்றி வரும் பணிகளுக்கு முன்னோடியாகப் பூம்புகார் ஆழ்கடலாய்வு உள்ளிட்ட பல ஆய்வுகளைச் செய்தவர்.

வட்டெழுத்துக் கல்வெட்டுகளைச் சரளமாகப் படிக்கக் கூடிய ஆற்றல் பெற்ற திரு. நடன. காசிநாதன் அவர்கள் தமிழ்நாடெங்கும் வரலாற்றுக் கருத்தரங்குகளையும், கல்வெட்டுப் பயிற்சி வகுப்புகளையும் நடத்திப் பல இளைஞர்களும் இத்துறையில் ஆர்வம் பெற உழைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லெழுத்துக் கலை, சோழர் செப்பேடுகள், தமிழர் காசு இயல், இராசராசேச்சுரம் முதலிய பல தமிழ் நூல்களையும், Under Sea Exploration off the shore of Poompuhar, The Metropolis of the Medieval Cholas முதலிய ஏராளமான ஆங்கில நூல்களையும் எழுதியதோடு, பல நூல்களைப் பதிப்பித்து, தொல்லியல் ஆய்வுத் துறைக்கு மிகப் பெரும் பங்களிப்பை ஆற்றியவர் திரு. நடன. காசிநாதன் அவர்கள்.

இவரது அளப்பரிய பங்களிப்புகளுக்கு அங்கீகாரமாகத் தமிழ்நாடு அரசின் உ.வே.சா. விருது, சிறந்த நூல் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்ற ஆய்வுச் செம்மல் நடன. காசிநாதன் அவர்கள்.

பணி ஓய்வுக்குப் பின்னும், தீவிரமாகத் தன் ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்த அறிஞரான நடன. காசிநாதன் அவர்களது மறைவு தொல்லியல் துறைக்குப் பேரிழப்பு. அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார், அறிஞர் பெருமக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரை!

# திருச்சி வடக்கு மாவட்டம் - துறையூர் தொகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

*திருச்சி, அக். 7 -*

*திருச்சி வடக்கு மாவட்டம், துறையூர் சட்டமன்ற தொகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று ஆலோசானை வழங்கி சிறப்புரையாற்றுகிறார். இதில் கழகத்தினர் கலந்துகொள்ள வேண்டுமாய் மாவட்டச் செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:*

*திருச்சி வடக்கு மாவட்டம் துறையூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தி.மு.க நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் தி.மு.க இளைஞர் அணி செயலாளரும், தமிழகத்தின் துணை முதலமைச்சரும்மான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 09.10.2025 வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் துறையூர் ஏ.வி.எஸ். திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்தில் துறையூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், கிளைக்கழக செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், (BLA2) பாக நிலை முகவர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் ந.தியாகராஜ் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.*

### மயிலை மேற்கு பகுதி இளைஞரணி:

# ஜெ.ராஜேஷ் தாயார் சந்திரா படத்திறப்பு நிகழ்ச்சி!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*சென்னை, அக். 7-*

*சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.ராஜேஷின் தாயார் திருமதி ஜெ.சந்திரா அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று 07/10/2025 செவ்வாய் கிழமை மாலை 7.00 மணியளவில் எண்.43, பி.பி. ராமன் சாலை லாயிட்ஸ் ரோடு இல்லத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்.*



*இதில் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி., கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, வட்டக் கழக செயலாளர் சீ.கிருஷ்ண மூர்த்தி, மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் தினேஷ் மாணிக்கம், த.விக்னேஸ்வரன் மற்றும் பகுதி கழக வட்ட கழக நிர்வாகிகள் மயிலை மேற்கு பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், பாக அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.*

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்க (கடலூர் மண்டலம்) நிர்வாகிகள்

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (கடலூர் மண்டலம்) (பதிவு எண். 218/CDR, பேரவை இணைப்பு எண். 1002) பணிமனைகள் மற்றும் மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் மதுரை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் **சி.கருணாநிதி** அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடத்தப்பட்டதில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக ஒருமனதாக போட்டியின்றி தேர்வு பெற்றுள்ளனர்.

**மத்திய சங்க நிர்வாகிகள்**

| | |
|---|---|
| தலைவர் | – P. பிரேம்குமார் (DR 4815, திட்டக்குடி) |
| துணைத் தலைவர்கள் | – 1) P. ராஜராஜன் (TR1242, காட்டுமன்னார்கோயில்) |
| | 2) M. விஸ்வநாதன் (DR3000, விருத்தாசலம்–I) |
| பொதுச்செயலாளர் | – தங்க ஆனந்தன் |
| துணைப்பொதுச்செயலாளர்கள் | –1) M. ஞானவேல் (DR 5736, கடலூர்–II) |
| | 2) K. தில்லைகோவிந்தன் (DR4488, நெய்வேலி) |
| பொருளாளர் | – D. செந்தில்மோகன் (DR 2988, சிதம்பரம்–II) |
| தலைமை நிலையச் செயலாளர் | –R. முரளிதரன் (CR4791, பண்ருட்டி) |
| அமைப்புச் செயலாளர் | – 1) G. பாலவினாயகம் (DR 4750, வடலூர்) |
| | 2) P. சூரியமூர்த்தி (DR 5363, பண்ருட்டி) |
| பிரச்சார செயலாளர் | – M. ரெத்தினவேலு (CR 4515, விருத்தாசலம்–I) |
| இணைச்செயலாளர்கள் | – 1) C. பொன்னிவளவன் (DR 5021, விருதாசலம்–II) |
| | 2) E. வீரபத்திரன் (DR 4252, பண்ருட்டி) |
| துணைச்செயலாளர்கள் | – 1) T. ராஜன் (DR 4621, கடலூர்–II) |
| | 2) N. சுரேஷ் (DR 4566, விருத்தாசலம்–II ) |
| | 3) V. மந்திரிகுமார் (DR 4765, நெய்வேலி) |

இடம்: கலைஞரகம்
நாள்: 06.10.2025

**மு.சண்முகம்,** Ex.MP
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி, நெமிலிச்சேரியில் சி.எம்.டி.ஏ. சார்பில் மேம்படுத்தப்படவுள்ள புத்தேரி ஏரிக்கரையின் பணிகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் – இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் தொடங்கி வைத்து பார்வையிட்டனர். இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, மண்டலக் குழுத்தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு தெற்கு மாவட்டம், மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியத்தில் புதிதாக நியமிக்கப்படவுள்ள கிளை மற்றும் பாக இளைஞர் அணி நிர்வாகிகள் பட்டியலை ஒன்றியத்திற்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச. சங்கர் கணேஸ் எம்.சி., மேற்பார்வையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம்,ஒன்றிய கழக செயலாளர் சு. குணசேகரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மதன்குமார் முன்னிலையில், துணை அமைப்பாளர்கள், பேரூர் மற்றும் கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் ஆய்வு மேற்கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்.